நேரடியாக வாருங்கள் என்றார். நானும், அங்கு சென்றிருந்தேன். அப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?' என்று கேட்டார். நான், 'நாகப்பட்டினத்தில் ஆய்வை முடித்துவிட்டு, கும்பகோணம் சாலையை ஆய்வு செய்யப் போகிறேன்' என்று கூறினேன். அவர், 'ஆய்வை பின்னர் வைத்துக்கொள்ளலாம். உங்கள் ஊர் திருவண்ணாமலைக்கு சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆன்மீகப் பெருமக்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். பாதுகாப்பு ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் எடுத்தாலுங்கூட, அமைச்சர், நீங்கள் அங்கு இருக்க வேண்டும்' என்று கட்டளையிட்டதன் அடிப்படையில், நான் கும்பகோணம் ஆய்வுப் பயணத்தை இரத்து செய்துவிட்டு, நேரடியாக திருவண்ணாமலைக்குச் சென்றேன். எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல், 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆன்மீகப் பெருமக்கள் சித்ரா பௌர்ணமியை சிறப்பாகக் கொண்டாடினார்கள் என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அடுத்த வாரம், கும்பகோணம் பகுதிக்கு ஆய்வுக்குச் செல்கிறபோது, மாண்புமிகு கொறடா அவர்கள் குறிப்பிட்ட சாலைகளையெல்லாம் நேரடியாக ஆய்வு செய்து, எவை எவைகளையெல்லாம் அமைக்க முடியுமோ, நிதி எந்தளவுக்கு இடம் தருமோ, அந்த அடிப்படையில் அந்தச் சாலைப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

144—

புதிய வருவாய் வட்டம்

***2765—திரு. கா. அண்ணாதுரை:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வருவாய் வட்டத்தைப் பிரித்து அதிராம்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

2022 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வருவாய் வட்டத்தினைப் பிரித்து அதிராம்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்குவது தொடர்பாக, மேற்படி வருவாய் வட்டத்தின் பொது மக்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் வேண்டுகோளின்படி, மாவட்ட ஆட்சியரின் கோரிக்கையின் அடிப்படையில் வருவாய் நிருவாக ஆணையரிடம் தக்க கருத்துரு பெறப்படும் நிலையில் மேற்படி வருவாய் வட்டத்தினை உருவாக்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. கா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலேயே மிகப் பெரிய வருவாய் வட்டம் பட்டுக்கோட்டை ஆகும். மொத்தம் 10 சரகங்களை உள்ளடக்கிய அந்த வட்டம், அதற்காக 3 மண்டல துணை வட்டாட்சியர்களை தற்போது பெற்றிருக்கிறது. நம்முடைய அரசின் திட்டங்களை விரைவாக எடுத்துச் செல்வதற்கு வருவாய் வட்டங்கள் சிறிய அளவில் இருப்பதுதான் இன்றைக்கிருக்கிற சூழ்நிலையில் சிறப்பாக அமைய முடியும் என்கிற வகையில், ஏறத்தாழ 702.35 சதுர கிலோ மீட்டரை உள்ளடக்கிய இந்த வட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் இரண்டாகப் பிரிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய வட்டங்களைச் சீரமைத்து, திருவோணம் வருவாய் வட்டம் இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அதிகாரிகளிடம் அதை*

ஆய்வு செய்யச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிகாரிகளிடமிருந்து கோப்பு வந்தவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துகொண்டு, நிச்சயமாக நல்ல முடிவை எடுத்துச் செய்து கொடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. கா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை வட்டத்தில் இருக்கக்கூடிய 10 சரகங்களில், நம்பிவயல் சரகம் மாத்திரமே திருவோணம் வட்டத்திலே சேர்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. 15 வருவாய்க் கிராமங்கள் அந்த வட்டத்திலே செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. மீதமிருக்கின்ற 160 வருவாய்க் கிராமங்களும் இந்த வட்டத்தில் அமைய இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவுரையைப் பெற்று, நம்முடைய ஆட்சியிலே பேரூராட்சியாக இருந்த அதிராம்பட்டினம், நகராட்சியாக இன்றைக்குத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. அதைத் தலைமையிடமாகக் கொண்டோ அல்லது மதுக்கூர் பேரூராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டோ ஒரு வட்டம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புதிய திருவோணம் வட்டம் துவங்கப்பட்ட பின்னர், மீதியுள்ள பட்டுக்கோட்டை வட்டத்திற்கு மக்கள்தொகை, பரப்பளவு ஆகியவற்றை ஆய்வு செய்து, அதிராம்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் CRA–விடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. சித்ரா அவர்கள்.*

2022 ஏப்ரல் 21]

திருமதி கு. சித்ரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஏற்காடு, அயோத்தியாபட்டணம், வாழப்பாடி, கருமந்துறை பகுதிகளில் அரசு தரிசு நிலத்தில் குடியிருக்கும் ஏழையெளிய மக்களுக்குப் பட்டா வழங்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வியே, கோட்டம் பிரிப்பது, வட்டம் பிரிப்பது தான். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிவிடுங்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சகோதரி அவர்கள் குறிப்பிட்ட ஊரை எழுதி, என்னிடத்திலே கடிதமாகக் கொடுத்தால், நிச்சயமாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.*

திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி வருவாய் வட்டம் சுமார் 9½ இலட்சம் மக்கள்தொகை கொண்ட பகுதியாகும். தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியத்தில், 20 ஊராட்சிகளில் சுமார் 3½இலட்சம் மக்கள்தொகை இருப்பதாலும்; தூத்துக்குடி மாநகராட்சி, 60 வார்டுகளில் சுமார் 6 இலட்சம் மக்கள்தொகை இருப்பதாலும், தூத்துக்குடி தாலுகா சுமார் 9½ இலட்சம் மக்கள்தொகை கொண்ட பெரிய தாலுகாவாக இருப்பதாலும் பட்டாக்கள் மற்றும் பல்வேறு சான்றிதழ்கள் பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, அப்பகுதி மக்களின் நலன் கருதி, தூத்துக்குடி தாலுகாவைப் பிரித்து புதுக்கோட்டை அல்லது வாகைக்குளம் பகுதியை மையமாகக் கொண்டு, புதிய தாலுகா உருவாக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி வட்டம், பெரிய வட்டம் என்பது எனக்கும் தெரியும். பொதுவாக நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய பகுதிகளிலே புதிதாக தாலுகாக்களைப் பிரித்து வழங்க வேண்டுமென்று*

கேட்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் துறைக்கு அனுப்பி, பரிசீலனை செய்யச் சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அது வந்தவுடனேயே அதற்கு வேண்டிய மேல் நடவடிக்கைகளை எடுப்போம். பொதுவாக, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவரவர்கள் பகுதியிலே ஒரு தாலுகாவைப் பிரிக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. நிதி நிலைமைக்கேற்றாற்போல வருடா வருடம், கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் பணிகளை நாங்கள் நிச்சயமாகச் செய்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.*

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி, நல்லம்பள்ளி, பெண்ணாகரம், பாலக்கோடு, காரிமங்கலம் ஆகிய ஐந்து வருவாய் வட்டங்களை உள்ளடக்கி தருமபுரியை மையமாகக் கொண்டு வருவாய்க் கோட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது மிகப் பெரிய வருவாய்க் கோட்டமாக இருக்கின்ற காரணத்தினால், பாலக்கோடு, காரிமங்கலம் ஆகிய இரண்டு வருவாய் வட்டங்களையும் பிரித்து, பாலக்கோட்டை மையமாகக் கொண்டு வருவாய்க் கோட்டம் அமைத்துத் தருவதற்காக முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, அரசினுடைய பரிசீலனையில் இருந்தன. அதனுடைய தொடர் நடவடிக்கையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாலக்கோட்டை மையமாகக் கொண்டு வருவாய்க் கோட்டம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, அரசுக்கு கோப்பு வரும் என்று சொன்னால் நிச்சயமாக அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*